பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 18 | வியாழக்கிழமை | 22.05.2025 | அதிர்வு 291

## ரணில் - மைத்திரி இரகசிய சந்திப்பு



உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்தல்உள்ளிட்டஎதிர்கால 06

# தமிழின அழிப்பு நினைவகம்: காலப் பெறுமதி மிக்க செயல்

## கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



"கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப் பெறுமதி மிக்க செயல். அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்."

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிடம் நேற்று நேரில் தெரிவித்துள்ளார். 07

# மக்களை மீண்டும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தச் செயலுக்கும் கனடா இடமளிக்கவே கூடாது!

## தூதுவரிடம் அமைச்சர் சந்திரசேகர் இப்படி வேண்டுகோள்



"இலங்கை மக்களை மீண்டும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் கனடா இடமளிக்கக் கூடாது."

– இவ்வாறு இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிடம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான கனேடியத் எரிக் வோல்ஸ் 06




மாகாண ஆளுநர் பதவி என்பது ஜனாதிபதியின் றப்பர் ஸ்டாம்ப் போன்றதுதான்.

மாகாணங்களுக்கு ஜனாதிபதி பிரித்து அளித்த அதிகாரங்களை மாகாண சபைகள் பிரயோகிக்கின்ற போது ஜனாதிபதியின் சார்பில் அவரது பிரதிநிதியாக அதை கட்டுப்படுத்தும் அதிகாரி தான் ஆளுநர். அதனால் ஜனாதிபதியின் போடுதடிகளாகவே ஆளுநர்கள் செயற்படுகிறார்கள்.

அந்த அதிகார வரம்புக்குள்ளும் ஓரளவுக்கு தற்றுணிவோடும் நியாயப்பாட்டோடும் செயற்பட்ட ஆளுநர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அத்தகைய தனித்துவமான ஆளுநர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தான்.

வடக்கு மாகாண சபையில் இருந்த மிக நல்ல மூன்று வாகனங்களை கொழும்புக்குத் தாரை வார்த்தார் முன்னர் வடக்கு ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா.

2013 இல் வடக்கு மாகாண சபை தேர்தெடுக்கப்பட்ட போது முதலமைச்சர் 06



# பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது!

**(கி.வசந்தன்)**

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐந்து லட்சம் ரூபா லஞ்சம் பெறமுற்பட்ட போது லஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லஞ்சம் கோருவதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்றைய தினம் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்த லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அதிகாரிகள் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஐந்து லட்சம் ரூபா லஞ்சம் பெற முற்பட்ட போது கைது செய்துள்ளனர்.

காணி விடயம் ஒன்று தொடர்பாக இந்த லஞ்சம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பொறுப்பதிகாரி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று வவுனியா நீதிமன்றில் முற்றப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நல்லூர் ஆலய முன் வீதியில் அசைவ உணவகம்

# ஆளுநரைச் சந்தித்து முறையிட சைவ சமய அமைப்புகள் திட்டம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

அண்மையில் நல்லூர் முன் வீதியில் திறக்கப்பட்ட அசைவ உணவகத்தை அகற்றுவது தொடர்பில் தமிழ்ச் சைவ பேரவையின் அழைப்பின் பெயரில் சைவ அமைப்புக்களின் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை 6.30 மணியளவில் நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெற்றது.

நாளை வெள்ளிக்கிழமை சைவ அமைப்புக்கள் மற்றும் ஆதீனங்கள், குருமார் ஒன்றியங்கள், ஆலய பரிபாலன சபையினர் தலைமையில் வடமாகாண ஆளுநரை சந்தித்து இந்த அசைவ உணவகத்தை அகற்றுவது தொடர்பில் மகஜர் ஒன்றை கையளிப்பது என இக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

எனவே இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ள விரும்பும் அல்லது ஆதரவு தெரிவிக்கும் அமைப்புக்கள் வியாழக்கிழமை நள்ளிரவிற்கு முன்னர் 0770756333 எனும் இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாநகர ஆணையரிடம் மகஜர் கையளிப்பு



யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் நேற்றையதினம் கையளிக்கப்பட்டது.

ஆலய பக்தர் ஒருவரின் தன்னார்வ முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையில் 450ற்கும் மேற்பட்டவர்கள் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர்.

கையொப்பங்கள் அடங்கிய மகஜர் யாழ் மாநகர சபை அலுவலகத்தில் வைத்து மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது சிவகுரு ஆதீனத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சைவ சமய ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

இந்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், நல்லூர் பிரதேச செயலாளர், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிப்பதற்கு 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

## வர்ணகுலசிங்கம் குற்றச்சாட்டு




(எஸ்.ரகுதீஸ்)

"யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்கனுமதி வழங்கக் கூடாது என நாம் குரல் குடுத்து வரும் நிலையில், 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு வடமாகாண கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதி நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்க அனுமதி வழங்கக் கூடாது என நாம் குரல் குடுத்து வரும் நிலையில், 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடலட்டை பிடிப்பதற்காக 310 படகுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், 600 வரையான படகுகள் கடலட்டை பிடியில் ஈடுபட்டுள்ளன.

ஊழலற்ற கட்சி, அரசு என கூறிக் கொண்டு வந்த என்.பி.பி. 310 படகுக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், எப்படி 600 வரையான படகுகள் கடலட்டை பிடியில் ஈடுபட்டுள்ளன.

அனுமதிக்கு மேலான 300 படகுகளுக்கும் லஞ்சம் வாங்கியே வடமராட்சி கிழக்கு கடலில் கடலட்டை பிடிக்கான படகுகள் தரித்து விடப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்டுள்ள தொழில்களுக்கு லஞ்சம் வாங்கிக் கொண்டு அனுமதியளிக்கும் அமைச்சு. கடல், மீன்பிடி பற்றி தெரியாத ஒருவர் அமைச்சராக இருந்து கொண்டு கடற்றொழில் பற்றி பேசுவது கிடையாது.

நாடாளுமன்றில் நேற்று விவசாயம், குளங்கள், வீதிகள் பற்றி பேசும் அமைச்சர் கடற்றொழில் பற்றி பேசவே இல்லை.

உள்ளூராட்சி சபைகளை ஆட்சி செய்வதில் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர வேண்டும், ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்க முன்வர வேண்டும். இனி மேலும் ஒன்று சேராமல் தமிழ் மக்களின் பிரசினைகளை கையாள முடியாது. இதனை தமிழ்க் கட்சிகள் உணர்ந்து மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விடின் எதிர் காலத்தில் மக்கள் இவ்வாறான கட்சிகளை நிராகரிக்க வேண்டும்.

தனித்து நிற்கும் கட்சிகளுக்கோ அல்லது அரசியல் வாதிகளுக்கோ வெளிநாட்டில் இருந்து எமது உறவுகள் பணம் அனுப்புவதை உடனடியாக நிறுத்த வேண்டும். அவ்வாறு பணம் அனுப்புவதை நிறுத்தினாலே இங்குள்ளவர்களை வழிக்கு பொண்டுவர முடியும்.

அரசு காணி சவீகரிப்பு தொடரபில் வர்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது. 5985 ஏக்கர் காணிகளில் 3500 ஏக்கர் வரையான காணி வடமராட்சி கிழக்கில் காணபப்படுகிறது. இக் காணிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையா வாழ்ந்து, கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பூர்வீகக் காணிகள் இவை.

யுத்தம் காரணமாக வேறு காரணங்களால் மக்கள் குறத்த பகுதகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதில் பலர் வெளி நாடுகளில் வசித்து வருகின்றனர், பலர் வேறு பகுதகளில் வசித்து வரும் நிலையில் இக் காணிகளை அரசுடமையாக்க அரசு முனைவதை நாம் எதிர்க்கறோம் ."

– என்றார்.



# அதிகரிப்பை பதிவு செய்த கொழும்பு பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 19.66 புள்ளிகளால் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

கொழும்புபங்குச்சந்தையின்அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 16,355.91 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 2.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

# விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்க நடவடிக்கை





மத்திய மாலைநாட்டில் வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் வீதிகளின் இருபுறமும் GALVANIES பூசப்பட்டபாதுகாப்புவேலிகளைஅமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் வாகன விபத்துக்கள் ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சுமார் 500 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் 40 இடங்களுக்கான பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆள்சேர்ப்பு விரைவில் இடம்பெறும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆள்சேர்ப்பு பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தரம் 1 முதல் தரம் 5 வரை சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 4,240

தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 2,827

தரம் 6 முதல் தரம் 11 வரை சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 11,274

தமிழ் மொழியில் 6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்புவரை உள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 6,121

மேல் மாகாணத்தில் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி அரசப் பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரையிலும், தரம் 6 முதல் 11 வரையிலும் பின்வரும் எண்ணிக்கையிலான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தரம் 1 முதல் தரம் 5 வரை சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 1318

தரம் 6 முதல் தரம் 11 வரை சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 1325

தமிழ் மொழிமூல வெற்றிடங்களின் எண்ணிக்கை - 397

கொழும்பு கல்வி வலயத்தில் சிங்கள மொழி மூல மற்றும் தமிழ் மொழி மூல அரச பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரையிலும், தரம் 6 முதல் 11 வரையிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

சிங்கள மொழிமூலம் தரம் 1 முதல் தரம் 5 வரையிலான ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 84 தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 85

தரம் 6 முதல் தரம் 11 வரை சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 226

தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை -140." - என்றார்.




# உலக மூளை ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு நடைபவனி, மரதன், தட, கள விளையாட்டுகள்

## யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

உலக மூளை ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் வகையில் நடைபவனி மற்றும் மரதன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என இலங்கை நரம்பியல் நிபுணர் சங்கத்தின் தலைவரும் நரம்பியல் நிபுணருமான வைத்தியர் அஜந்தா கேசவராஜா தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தஊடகசந்திப்பில்வடக்குமாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் முகுந்தன், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு துறை அதிகாரி விஜிதரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை நரம்பியல் நிபுணர் சங்கத்தின் ஊடாக வட மாகாண மக்களுக்கு “மூளையின் ஆரோக்கியத்தைப் பேணுதல்“ எனும் தொனிப் பொருளில் வயது மற்றும் பால் வேறுபாடு இல்லாமல் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

உலக மூளை ஆரோக்கிய தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் உலக நரம்பியல் சம்மேளனத்தினுடைய ஆலோசனைக்கமைய ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நரம்பியல் சம்பந்தமான, மூளை சம்பந்தமான அமைப்புகள் ஒன்றிணைந்து மக்களிடையே மூளை பற்றிய கருத்துக்களை கொண்டு சேர்ப்பது மட்டுமல்லாது மூளையுடன் சம்பந்தமான நோய்கள் எவை, அவை ஏன் ஏற்படுகின்றன, அவற்றை எவ்வாறு கட்டப்படுத்தலாம் என்பன பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஒரு தினமாக முன்னெடுக்கப்படுகிறது. ஜூலை 22 ஆம் திகதி நாம் அந்த தினத்தை கொண்டாடுகிறோம். அந்தத் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்திலே இது சம்பந்தமாக ஆரம்ப கட்ட நிகழ்வாக இரண்டு நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இளம் சமுதாயத்தினருக்கு உடற்பயிற்சியை ஊக்குவிக்கவும், தடகள விளையாட்டுக்களில் பங்கேற்க செய்யும் வகையிலான ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மரதன், தடகள விளையாட்டை மேற்கொள்ளவுள்ளோம்.

மூளையைத் தாக்குகின்ற நோய்களில் மிகக் கொடூரமானதும், அதிகமாக எமது மக்களிடையே காணப்படுவதும் பக்கவாதமாகும். பக்கவாதம் சம்பந்தமான தனிப்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒரு நடைபவனியை ஏற்பாடு செய்துள்ளோம். வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் ஒத்துழைத்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியிலிருந்து நடைபவனி ஆரம்பித்து துரையப்பா விளையாட்டரங்கில் முடிவடையும்.

இந்த நிகழ்விலே பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமல்லாது இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள், அவருடைய குடும்பத்தினர்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள், பொதுமக்கள் என அனைவரையும் பங்கேற்க அழைக்கின்றோம்.

மரதன், தடகள போட்டியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் அனைவரும் எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி பண்ணை பகுதியில் 5.30 மணியளவில் ஒன்றுகூடுவதன் மூலமாக இதில் பங்கேற்கமுடியும்.

பண்ணை பகுதியில் ஆரம்பிக்கும் மரதன் ஓட்டம் கந்தர்மடத்தை அடைந்து கல்வியன்காடு, கோப்பாய் ஊடாக உரும்பிராய், மருதனார்மடம், இணுவில், கொக்குவில் ஊடாக யாழ்ப்பாணம் துரைப்பா விளையாட்டரங்கில் நிறைவடையும்.

மரதன் ஓட்டத்தை இடை நடுவில் இருந்தும் குறிப்பிட்ட தூரத்தை ஓடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரச அலுவலகங்கள் போன்றவற்றுக்கு இது சம்பந்தமான விடயங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதில் அதிகளவானவர்கள் பங்குபற்றுவதன் மூலம் விளையாட்டு நிகழ்வைத் தாண்டி, உடல் ஆரோக்கியத்தையும் மூளையின் ஆரோக்கியத்தையும் கூட தொடர்ச்சியாகப் பேணமுடியும் – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உள்ளிட்ட மூன்று அமைச்சர்களின் பாவனைக்காக 2014 இல் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களில் மூன்றே இவ்வாறு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவி னால் தெற்குக்கு கையளிக்கப்பட்டு மீளப் பெற முடியாத இக்கட்டில் சிக்கி நிற்கின்றன.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் பெயரில் பதிவில் உள்ள வாகனங்களில் **NPKY 6503, NPKY 5787** பதிவிலக் கங்களைக் கொண்ட இரு வாகனங்க ளும் ஜனாதிபதி செயலகத்திற்கும் **NPCAA 0979** இலக்க வாகனம் பொலிஸ் திணைக்களத்திற்கும் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் வழங்கப்பட்டன.

இந்த 3 வாகனங்களும் 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை உருவாக் கப்பட்டபோது முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களின் பாவனைக்காக 2014 இல் ஒவ்வொன்றும் பல கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டவை. 2018 ஆம் ஆண்டு மாகாண சபையின் ஆயுள் காலம் நிறைவுற்றபோது அமைச் சர்கள் மீளக் கையளித்த வாகனங்கள் அவை.

இதிலே ஜனாதிபதி செயலகப் பயன் பாட்டிற்கு வழங்கிய இரு வாகனங்களும் முன்னைய ஜனாதிபதிகளின் காலங்க ளில் அவர்களின் செயலகத்தினால் பிற தரப்புகளின் பாவனைக்கு ஒப்படைக்கப் பட்டிருந்த போதும் புதிய ஜனாதிபதி பதவியேற்ற கையோடு மீண்டும் ஜனா திபதி செயலகத்துக்கே வந்து சேர்ந்து விட்டன எனத் தெரிகின்றது. அவை இரண்டும் ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளபோதும் வடக்கு மாகாண சபையிடம் மீள ஒப்படைக்கப் படவில்லை.

பொலிஸ் திணைக்களத்திடம் ஒப் படைத்த வாகனம் வடக்கு மாகாண முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பாவித் தது. பல கோடி ரூபா பெறுமதியானது. இந்த வாகனத்தை அப்போதைய ஆளு நர் ஜீவன் தியாகராஜா பொலிஸ் திணைக் களத்திடம் ஒப்படைத்தபோது, அதற்குப் பதிலாக ஒரு காரை பொலிஸ் திணைக் களத்திடமிருந்து பெற்று மாகாண சபை கராஜில் நிறுத்தியிருக்கின்றார். நீண்ட காலமாக - 6,7 வருடங்களாக - தரித்து நிறுத்தப்பட்ட நிலையில் செயலிழந்து கிடக்கின்றது அது.

முதலமைச்சருக்குரிய வாகனத்தை மீளத் தாருங்கள் என்று இப்போது பொலிஸ் திணைக்களத்திடம் கேட்டால், நாம் தந்த காரைச் செயல்படும் நிலையில் தாருங்கள் என்று பொலிஸ் திணைக் களம் கூறிவிட்டதாம்.

அந்தக் கார் ஆளுநர் செயலகத் தில் நிற்கின்றபோதும் அதை இயக்க முடியாத நிகையில் என்ன செய்வது என்று தெரியாமல் அதிகாரிகள் கைக ளைப் பிசைகின்றார்கள்.

நாங்கள் தந்த காரைச் சீர் செய்து தாருங்கள், உங்கள் வாகனத்தைத் திருப் பித் தருகின்றோம் என பொலிஸ் திணைக் களம் கூறி விட்டது.

பொலிஸ் திணைக்களத்தின் காரைச் சீர் செய்ய 12 முதல் 15 லட்சம் ரூபா வரை யில் செலவு ஏற்படும் என மதிப்பிடப்படுகின் றது. மாகாண சபையின் பதிவில் இல்லாத வாகனத்திற்கு இவ்வளவு செலவு செய் தால் கணக்காய்வுக் குழுவின் கேள்விக்கு எவ்வாறு பதிலளிப்பது, அதனால் அந் தக் காரை எம்மால் சீர் செய்ய முடியாது என பிரதம செயராளர் அலுவலகமும், ஆளுநர் செயலகமும் மாறி, மாறி கார ணம் கூறியமையால் இன்று வரை கார் திருத்தப்படவும் இல்லை, வடக்கு மாகாண சபையின் வாகனத்தை பொலிஸ் திருப் பிக் கொடுக்கவும் இல்லை. இந்தத் திரு விழா இப்படியே இழுபடும் என்றே தோன்றுகின்றது...!

## ரணில் - மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அரசியல் நகர்வுகள் குறித்து கொழும்பு - பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் இரகசிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதில் பங்கேற்றுள்ளார்.

முன்னாள்சபாநாயகர்மஹிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் முக்கிய அர சியல் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவிக்கை யில்,

"அநுர அரசின் தோல்வி உறுதியாகி விட்டது. ஒருபுறம் பாதாள உலகக் குழுக்க ளின் செயற்பாடுகள் தலைதூக்கியுள்ள நிலையில், மறுபுறம் உப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

கள்வர்கள் என விமர்சித்த எமது உறுப்பி னர்களிடம் பேரம் பேசி, அவர்களின் ஆதரவுடன் சபைகளை நிறுவுவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

அதிகாரத்துக்காக எதையும் செய்யும் சம்பிரதாயபூர்வ அரசியலிலேயே அவர் கள் ஈடுபட்டுள்ளனர். சகல எதிர்க்கட்சிக ளுடனும் இணைந்து உள்ளூராட்சி மன் றங்களில் ஆட்சி அமைத்து மக்களுக் கான சேவைகளை வழங்குவோம்.

அரசு 50 சதவீத வாக்குகளைப் பெற் றுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நாம் தலையிடப் போவதில்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் 50 சதவீதத்தைப் பெற் றுள்ளவற்றில் நிச்சயம் நாம் ஆட்சி அமைப் போம்.

குரங்குகள் சனத்தொகை கணக்கெடுப் பைப் போன்று நடைமுறை சாத்தியமற்ற திட்டங்களைத் தவிர, பிரயோசனமான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியின் பின்னர் முதன்முறையாக இலங்கையில் உப்புத் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளது.

அரசின் மீது மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், மக்க ளின் செய்தியை எதிர்க்கட்சிகள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்." - என்றார்.

## மக்களை மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஆகியோருக்கிடையில் நேற்று புதன் கிழமை கொழும்பில் அமைச்சகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு வேண் டுகோள் விடுத்தார்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர், கனேடியத் தூதுவரை அன்புடன் வரவேற்று, இலங்கையின் மீனவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர் கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் குறிப்பாக வடக்கு மக்களின் வாழ்வாதா ரப் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

அபிவிருத்தியில் பின்தங்கிய சமூக மாக வாழும் வடக்கு மக்களின் நிலை குறித்து இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், 30 வருட கால யுத்தத்துக்குப் பின்னரும் வடக்கு மக்கள் இன்னும் முறையான கவனம் செலுத்தப்படாமல் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த கால அரசுகள் தமிழ் மக்களைப் பெரும்பாலும் புறக்கணித்ததாகவும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு எந்தப் பாகுபாடுமின்றி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

ஊழல், மோசடி மற்றும் இனவாதம் அற்ற ஒரு நாட்டை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தி அரசின் முக்கிய நோக்கம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் உள்ள பல சமூகங்கள் வறு மைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வதாகவும், 40 வீதமானோர் இன்னும் தற்காலிக கொட்டில்களில் வசிப்பதாகவும் அமைச்சர் விளக்கினார்.

பெற்றோரை இழந்த பிள்ளைகள், வித வைகள் மற்றும் பல முதியோர் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

மேலும், 60 வீத மக்கள் கடன்பட்டு வாழ் வதாகவும், கடனைத் திருப்பிச் செலுத்தப் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும், வன்னிப் பிரதேசத்தில் பெண்கள் தற் கொலை செய்துகொள்வது அதிகரிப்ப தற்கு இதுவே முக்கிய காரணம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலில் ஈடுபடும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் கனேடியத் தூதுவருடன் அமைச்சர் சந்திர சேகர் கலந்துரையாடினார். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு தீவிர மாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் தெற்கு மீனவர்கள் எந்தப் பாகுபாடு இல்லாமல் தமது தொழிலில் ஈடுபட்ட ஒரு காலம் இருந்ததாகவும், ஆனால் பாகுபாடு அரசியல் இலங்கை யில் இனவாதத்தை வளர்த்து தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்ததாகவும் அமைச்சர் கவலை தெரிவித்தார்.

நாட்டில் நல்லிணக்கத்தையும் ஒற்று மையையும் கட்டியெழுப்ப அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக வும் அவர் குறிப்பிட்டார்.

எந்த வடிவத்திலும் இனவாதத்துக்கு இனி இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

அரசின் செயற்பாடுகளைக் குழப்ப மீண்டும் இனவாதப் பிரிவுகளைத் தூண்டி விட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

இலங்கை மக்களை மீண்டும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் கனடா இடமளிக்கக் கூடாது என்றும் கனேடியத் தூதுவரிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ், இலங்கையின் நல்லிணக்க முயற்சிக ளுக்கு கனடாவின் முழு ஆதரவை வழங் குவதாகக் கூறினார்.


ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிரா கப் போராடுவதற்கு தேசிய மக்கள் சக்தி பெற்ற வலுவான மக்கள் ஆணையை அவர் குறிப்பாகப் பாராட்டினார்.

இந்த முயற்சிகளுக்குக் கனடாவின் தொடர்ச்சியான ஆதரவைத் தூதுவர் வெளிப்படுத்தினார்.

புதிய அரசை சர்வதேச சமூகம் வரவேற் றுள்ளதாகவும் கனேடியத் தூதுவர் குறிப் பிட்டார்.

07

# அதிவேக வீதிகளில் வங்கி அட்டைகள் ஊடாக கொடுப்பனவு செலுத்த முடியும்



அதிவேக வீதிகளில் வங்கி அட்டைகள் ஊடாக கொடுப்பனவுகளை செலுத்தும் வசதி நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

தெற்கு அதிவேக வீதி, கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதி மற்றும் மத்திய அதிவேக வீதியின் குருநாகல், மீரிகம ஆகிய பகுதிகளில் வங்கி அட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை செலுத்த முடியும் என துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள், போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

35 இடமாறல்கள் மற்றும் 119 வெளியேறல் பகுதிகளில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அதிவேக வீதிகளில் கொடுப்பனவு நடவடிக்கைகளின் போது ஏற்படும் வாகன நெரிசல்களை குறைப்பதனூடாக பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதத்தை குறைத்துக்கொள்ள முடியுமென துறைசார் அமைச்சு தெரிவிக்கின்றது.

## மக்களை மீண்டும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய படைவீரர்கள் தினத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையையும் கனேடியத் தூதுவர் பாராட்டினார்.

நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளர், கலாநிதி பீ. கே. கோலித்த கமல் ஜீனதாச, பொருளாதாரப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள மீன் வளர்ப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குமாறு கனேடியத் தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக, கடல் அட்டை வளர்ப்பு மையங்களை நிறுவுவதற்கும், தனியார் – பொதுப் பங்காளித்துவங்களை ஊக்குவிப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்படும் இந்தத் திட்டங்களுக்கான நிதி நிறுவனங்களைக் கண்டறிவதற்குக் கனடாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது என்றும் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கடல் அட்டை வளர்ப்பு மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும், களு கங்கை நீர்த்தேக்கத்தில் புதிய மீன் வளர்ப்புத் திட்டங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளையும் கருத்தில்கொள்ளுமாறும் அவர் கோரினார்.

கனடாவின் வலுவான மீன்பிடித்துறையையும், மேம்பட்ட மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தையும் முன்னிலைப்படுத்திய தூதுவர் எரிக் வோல்ஸ், எதிர்காலத்தில் இந்தத் துறைகள் தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ், கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் பற்றிக் பிக்கரிங் மற்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ. கே. கோலித்த கமல் ஜீனதாச ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழின அழிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் கனேடியத் தூதுவரிடம் கடிதம் ஒன்றையும் சிறீதரன் எம்.பி. கையளித்துள்ளார்.

மேற்குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானிக்கும், பிரம்டன் நகர மேஜர் பற்றிக் பிரவுணுக்கும் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே நேற்று கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பியால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இலங்கைத்தீவின் அளவில் சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படும் தமிழ்த் தேசிய இனம் மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை “இனப்படுகொலை” என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடான கனடாவின் பிரம்டன் நகரில், தமிழின அழிப்பு நினைவுத்தூபி நிறுவப்பட்டு, வலிசுமந்த மாதமான மே மாதத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை, பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனக்காயங்களுக்கு மருந்தாய் அமைந்துள்ளதை நன்றியோடு பதிவு செய்கின்றேன்.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட போரின் அறமீறல்கள் குறித்தும், போர் முடிவுற்றதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தொடர்பிலும் கரிசனையோடிருக்கும் கனேடிய அரசினால், ஈழத் தமிழினம் சார்ந்து சமகாலத்தில் முன்னகர்த்தப்படும் காத்திரமான செயல்களும், அறிவிப்புகளும் சர்வதேச அரங்கிலும், தமிழ் மக்கள் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உணர முடிகின்றது.

தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பரிகார நீதியைக் கோரி நிற்கின்ற எங்கள் இனம், கடந்த 15 ஆண்டுகளாக ஏமாற்றங்களை மட்டுமே எதிர்கொள்ள நேர்ந்திருக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொள்ளத் தலைப்படாத உலக அரங்கில், “இலங்கையில் நிகழ்ந்தது இனப்படுகொலையே” என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டதோடு, இறுதிப் போரின்போது கொல்லப்பட்டோருக்காகவும், மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் தொடர்ந்து நீதி கேட்கும் கனடா, தனது நாட்டின் முதன்மை நகரான பிரம்டனில் ஈழத்தமிழர்களின் அரசியல் தாகத்தை சொல்லும் தமிழீழக் குறியீட்டுடன் கூடிய நினைவுத்தூபியை நிறுவியமையும், தமிழினப் படுகொலையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கனடாவிலிருந்து தாராளமாக வெளியேறலாம் என்ற பிரம்டன் நகர மேயரின் அறிவிப்பும் ஈழத்தமிழர்களுக்கான நீதியின் முகமாக கனடாவை அடையாளப்படுத்தியிருக்கின்றது.

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் நேரடிக் குற்றவாளிகளான இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மற்றும் இராணுவப் பின்புலம் கொண்டவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்தமை, தமிழினப் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு, நினைவுத்தூபி அமைப்பு, உயிர் அச்சுறுத்தல்களால் புலம்பெயரும் ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கல் என ஈழத்தமிழர்கள் சார்ந்து தங்களால் முன்னெடுக்கப்படும் அத்தனை செயல்களும், எமது இனத்தின் அரசியல் விடுதலையில் கனடா நாட்டின் பங்களிப்பு கனதிமிக்கதாக இருக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையை எமக்கும் எமது மக்களுக்கும் வழங்கியிருக்கின்றது.

அந்த நம்பிக்கைக்கான சாட்சியமாக, இனப்படுகொலைக்கான நீதியைப் பெறுவதிலும், எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகளிலும் தங்களது இராஜதந்திர வழிகாட்டுதல்கள் மற்றும் மூலோபாயங்கள் எமக்கு துணை செய்யும் என்ற நம்பிக்கையின் செய்தியாக, மீளவும் ஈழத்தமிழர்கள் சார்பிலான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.”

– என்றுள்ளது.









# கொழும்பில் கால்வாய், வடிகான் கட்டமைப்புகளை விரைவாக புனரமைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை



கொழும்பிலுள்ள கால்வாய்கள் மற்றும் வடிகான் கட்டமைப்புகளை விரைவாக புனரமைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு மற்றும் சிக்கன்குன்யா பரவும் வேகம் அதிகரித்துள்ளதால் கால்வாய்கள் மற்றும் வடிகான் கட்டமைப்பை விரைவாக புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி துறைசார் பிரிவு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணம், வீடமைப்பு அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் கால்வாய்கள் மற்றும் வடிகான் கட்டமைப்புகள் முறையாகப் பேணப்படாமை தொடர்பில் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளிடம் கேட்டறிந்துள்ளார்.

குப்பை மற்றும் கழிவுநீரை முறையாக அகற்றுவது குறித்து நிலையான தீர்வுகளுடன் கூடிய திட்டத்தை தயாரித்து அவற்றை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை வழங்கியுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினவாதத் திமிர்த்தனம்...!

பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க ஆட்சி பீடங்களின் அடக்குமுறைத் திமிர்த்தனம் வர வர கட்டுமட்டின்றி அதிகரித்துச் செல்கின்றது.

அதுவும் தமிழர் தரப்பில், தமிழர்களின் தாயகத்தையும் தேசியத்தையும் பாதுகாக்கும் காப்பரணாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை, சிதைத்தழித்து விட்டோம் என்ற தடிப்பு, பேரினவாதத்தை மேலும் தீவிரத்துடன் மோசமாக வெளிப்படுத்தத் தூண்டி நிற்கின்றது என்பது கண்கூடு.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனியார் தொலைக்காட்சியொன்றில் கருத்து வெளியிட்ட இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்த கருத்து அந்த ஆணவப் போக்கை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவை தாராளமாக இடம்பெற்றன என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அடுத்தடுத்து நிறைவேற்றிய பல தீர்மானங்களில் தொடர்ந்து வலியுறுத்தி நிற்கின்றது. அவை பற்றிய ஆவணங்களையும், சாட்சியங்களையும், ஆதாரங்களையும் பதிவு செய்து, சேகரித்து, பேணும் நடவடிக்கையை மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

இந்தக் கொடூரங்கள், குற்றங்கள், உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நடுநிலையான நீதி விசாரணையை நடத்துவதற்குத் தொடர்ந்து பிடிவாதமாக மறுத்து நிற்கும் கொழும்பு, இப்போது இந்த விடயங்களில் நீதி, நேர்மையான விசாரணைக்கு அழுத்தங்கள் கழுத்தை இறுக்குவது போல வருகின்ற போது, அவற்றைச் சமாளிப்பதற்கு மேலும் நெருக்குவாரங்கள், அடக்குமுறைகளைத் திணிக்க தீவிரத்துடன் முயற்சிக்கின்றது. அதன் மூலம் தனக்கு எதிரான குற்றச்சாட்டு அழுத்தங்களை அடக்கலாம் என அது கனவு காண்கின்றது.

நாட்டில் இடம்பெற்றது இன அழிப்பு என்பது போன்ற கருத்துக்கள் பகிரப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இப்போது இலங்கை வெளி விவகார அமைச்சர் விஜித்த ஹேரத் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என செய்திகள் வெளியாகி உள்ளன.

இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெற்றதாக கூறும் குற்றச்சாட்டுகளை அரசு தொடர்ந்து முற்றாக நிராகரிக்கின்றது என அவர் மீளவும் வலியுறுத்தி உள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 16 ஆண்டுகளாக நீதி, நியாயமான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு மறுத்தபடி, மறுபக்கத்தில் அப்படிக் குற்றச் சம்பவங்களே இடம்பெறவில்லை எனக் கொழும்பு சாதித்து நிற்கின்றது.

அப்படி குற்றச் சம்பவங்கள் நிகழவில்லை என்றால் அந்த விடயம் தொடர்பில் சுயாதீன - சுதந்திரமான - பக்கச் சார்பற்ற - நடுநிலையான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணைக்கு இணங்குவதுதானே...? மடியில் கனம் இல்லையானால் வழியில் பயம் எதற்கு....?

விசாரணைகளை நடத்தாமல், அதற்கு ஒரேயடியாக மறுத்தபடி, மறுபுறத்தில் குற்றம் சுமத்துபவர்களைத் தண்டிப்பதற்கு தென்னிலங்கை கோடி காட்டுகின்றமை அதன் பேரினவாத திமிர்த்தன நாசக்கார போக்கின் அடுத்த கட்டம்தான்...!



# மத்திய கிழக்கு நாடுகளுடன் இந்திய அரசு ஒப்பந்தங்கள்

பாகிஸ்தானுடனான மோதலைத் தொடர்ந்து இந்திய அரசு மத்திய கிழக்கு நாடுகளுடன் தனது பொருளாதார உறவுகளை ஆழப்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் தனது பழைய நட்பு நாடான ஓமனுடன் விரைவில் ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – ஓமன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துவிட்டன எனவும் மேலும், இந்த மாதமே அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டார் போன்ற பிற வளைகுடா நாடுகளுடன் இதேபோன்ற ஒப்பந்தங்களை இந்தியா தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

கடந்த பெப்ரவரியில் இந்தியாவுக்கு வருகை தந்த கட்டாரின் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி, இந்தியாவில் பெரிய முதலீடுகளைச் செய்ய விரும்புவதாக தெரிவித்தார். இந்தியா – பாகிஸ்தான் மோதலின் போது கட்டார் நடுநிலை வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் முக்கிய இறக்குமதிகளில் பெட்ரோலிய பொருள்கள் மற்றும் யூரியா ஆகும். இவை இறக்குமதி செலவில் 70 வீதத்துக்கும் அதிகமாகும்.

அதேபோல் கட்டாருடன் 14,500 கோடி ரூபா ஏற்றுமதியும், ஒரு லட்சத்து ஐந்தாயிரம் கோடி இறக்குமதியும் செய்கிறது.

இந்தியா கட்டாரிலிருந்து மிகப்பெரிய அளவில் திரவமயமான இயற்கை வாயுவை இறக்குமதி செய்கிறது. இது இந்தியாவின் சக்தி தேவையை பூர்த்தி செய்ய முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வாயுவுடன் சேர்த்து, கச்சா எண்ணெய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற எரிபொருள்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஐக்கிய அரபு அமீரகத்துடன் இந்தியா மூன்று லட்சம் கோடி ரூபா ஏற்றுமதியும் நான்கு லட்சம் கோடி ரூபா இறக்குமதியும் செய்கிறது.

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து அதிக அளவில் தங்கம் மற்றும் அலங்கரிக்கப்பட்ட நகைகள், வைரங்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆக்கிரமிப்பு காஷ்மீரின் லீபா பள்ளத்தாக்கில் இருந்த பாகிஸ்தான் இராணுவ தளங்கள் முழுமையாக அழிப்பு

## இந்திய இராணுவ உயர் அதிகாரி தகவல்



ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது ஆக்கிரமிப்பு காஷ்மீரின் லீபா பள்ளத்தாக்கில் செயல்பட்ட பாகிஸ்தானின் இராணுவ தளங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 7 ஆம் திகதி பாகிஸ்தானில் செயல்பட்ட 9 தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

அப்போது ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்ட பாகிஸ்தான் இராணுவ முகாம்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. இதுகுறித்து இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

“ஆக்கிரமிப்பு காஷ்மீரின் லீபா பள்ளத்தாக்கில் 3 பாகிஸ்தான் இராணுவ தளங்கள் செயல்பட்டன. இந்த தளங்களில் ஆயுத கிடங்குகள், எரிபொருள் கிடங்குகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டிருந்தன.

ஒபரேன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது லீபா பள்ளத்தாக்கில் இருந்த அனைத்து இராணுவ தளங்களும் நிலைகளும் முழுமையாக அழிக்கப்பட்டன. இந்த தளங்களை சீரமைக்க குறைந்தபட்சம் ஓராண்டு வரை தேவைப்படும். எங்களுக்கு கிடைத்த தகவல்களின்படி இந்திய இராணுவத்தின் தாக்குதல்களில் 64 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 100 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஒபரேஷன் சிந்தூரின்போது காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக 3 மடங்கு அதிகமாக நாங்கள் தாக்குதல் நடத்தினோம். இதில் பாகிஸ்தானின் எல்லையோர நிலைகள் முழுமையாக அழிந்துள்ளன. எங்களது தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடந்த 10 ஆம் திகதி காலையில் பாகிஸ்தான் நிலைகளில் வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டன.

காஷ்மீரின் முஷாபராபாத்தில் இருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவு எல்லைப் பகுதியை ஆக்கிரமிப்பு காஷ்மீரின் லீபா பள்ளத்தாக்கு பகிர்ந்திருக்கிறது. கடந்த 2016 ஆம் ஆண்டில் லீபா எல்லைப் பகுதிகளில் இந்திய இராணுவம் துல்லிய தாக்குதல் நடத்தியது. அப்போது பாகிஸ்தானின் பல்வேறு இராணுவ நிலைகள், தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

தற்போது மீண்டும் ஒருமுறை லீபா பள்ளத்தாக்கில் இராணுவ தளங்கள், தீவிரவாத முகாம்கள் முழுமையாக அழிக்கப்பட்டு உள்ளன. இந்த எல்லைப் பகுதியை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.



# அரசியல் செலவுகளை குறைக்க தயாராகின்றார் எலோன் மஸ்க்

அரசியல் சார்ந்த செலவினங்களைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக உலக கோடீஸ்வர வர்த்தகர் எலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு டெஸ்லாவின் தலைமை நிர்வாக அதிகாரியாக, தமது நிறுவனத்தை வெற்றிகரமான பாதையில் கொண்டு செல்லும் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டாரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஏற்கனவே தாம் நிறைய நன்கொடைகளை அளித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மஸ்க்கின் இந்த தீர்மானம் அமெரிக்காவில் நடைபெறவுள்ள இடைக் காலத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் உக்ரைனிய இராணுவ வீரர்கள் 6 பேர் பலி



ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலில் உக்ரைனிய இராணுவ வீரர்கள் அறுவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பயிற்சி முகாம் ஒன்றில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் 10 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் 11 மில்லியன் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்படும் அபாயம்



பாகிஸ்தானில் 11 மில்லியன் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்படும் அபாயத்தில் இருக்கின்றனர் என சமீபத்திய அறிக்கை ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நடத்திய ஆய்வில், பாகிஸ்தானில் பலர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில், பலுசிஸ்தான், சிந்து மற்றும் கைபர் பக்துன்க்வாவில் உள்ள 22 சதவீத மக்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறார்கள் என்றும் 1.7 மில்லியன் மக்கள் அவசர நிலையை எதிர்கொள்கிறார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

28

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தங்களது யுத்த வெற்றியை நினைவுகூர்ந்த நாளான மே 19 ஆம் திகதி உரையில் "நாங்கள் மோதல்களற்ற, குரோதமற்ற சமுதாயத்தை எங்களது சந்ததிகளுக்கு விட்டுச் செல்ல வேண்டும். அதற்காக சமாதானத்தை ஏற்படுத்தி வலுச் செய்ய வேண்டும்" எனக் கூறி, "நாடு பொருளாதார ரீதியில் வீழ்ந்து கிடக்கின்றது. அப்படி விழுந்து கிடக்கும் நாட்டில் எங்கு இறையாண்மை உள்ளது? பலமான பொருளாதாரமற்ற நாடாக இருக்கின்றோம். உலகில் கௌரவமான நாடாக உயர்வதற்கு பொருளாதார ஸ்திர நிலையை ஏற்படுத்த வேண்டும். குற்றங்கள், தொற்று நோய்கள் அற்ற நாடு உருவாக வேண்டும். மோதல்களற்ற, குரோதமற்ற நாடு உருவாக வேண்டும். அதன் ஊடாகவே பலமான இறையாண்மை ஏற்படும்" என உரையாற்றினார்.

நோக்கங்கள் நல்லவை. ஆனால் கனவுகள் மெய்ப்பட வேண்டும்.

ஜே.ஆர்., பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த ரணில் என இருந்த ஜனாதிபதிகள் யாவருமே நாட்டை சிங்கப்பூராக மாற்றுவோம், அதனை இத்தனை நொடிகளில் ஆக்குவோம் என ஒவ்வொரு மேடைகளிலும் பேசி, நாட்டை உலுப்பிப் பின்தள்ளிக் கொண்டிருந்த இனப் பிரச்சினையை மகா சங்கத்திற்காக ஆதரித்து, படிப்ப

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲


டியாக அந்த ஆராதனைகளால் வங்குரோத்து நிலைக்கு நாட்டைத் தள்ளியவர்கள்தான். நாட்டின் முழு நிலப்பரப்பிலும் தங்களது இறையாண்மை நிலைப்படுத்தப்பட வேண்டும், அதற்கான முழு அதிகாரங்களும் தங்கள் கைகளிலேயே இருக்க வேண்டும் என்ற கொள்கையை முன்னெடுத்து, இன்று வரை காகிதக் கப்பலில் இறையாண்மைத் தேரோடி நிற்கின்றோம் என்பதை, அதற்குக் காரணகர்த்தாக்களான ஜே.வி.பியின் இன்றைய தலைவர் உரைப்பது புரிந்துணர்வின் வெளிப்பாடா, அன்றில் மற்றவைகள் அல்ல, பொருளாதாரம் தான் எம் முன் நிற்கும் பாரிய கஷ்டம், அதைக் கவனித்து வெளியேறி விட்டால, மற்றவை யாவும் எங்கள் கொள்கைப் பிரகாரம் சரியாகிவிடும் என்று அர்த்தமா?

சமதர்மம், சம உரிமை, 13 ஆம் திருத்தச் சட்டத்தின் முழு அமலாக்கம் என இனப்பிரச்சினைக்கு அன்றில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு தீர்வான வார்த்தைப் பிரயோகங்கள், கருத்தியல்கள் வைக்கப்பட்டாலும், அவற்றை நிதர்சனமான சமிக்ஞைகளாகப் பார்ப்பதற்கு அவை பல அர்த்தங்களை தரக்கூடியனவாகவும், அவை தங்களது விருப்பமாகவும், எதிர்பார்ப்பாகவும், ஏதோ தங்களுக்கு இவற்றை தருவதில் ஆட்சேபனை இல்லை, ஆனால் எதிர்ப்பாளிகள் இருப்பார்கள், அவர்களை எப்படிச் சமாளிப்பது என்ற பழைய பல்லவியில் அவை வெளிப்படுத்தப்பட்டவையாக தோன்றுகிறது. மாறாக, எதுவிதமான திடமான மாற்றுக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த திட்ட வரைவில் அவர்களது கருத்தியலின் வார்த்தைகள் அமையவில்லை. இந்த வார்த்தைகளிடையே, வெளியிடப்பட்ட காணி உரித்து சம்பந்தமான வர்த்தமானியை பார்த்தால், நித்திரைப் பாயைக் கீழிருந்தே உருவும் சாகசம் வெளிப்படுகின்றது. இந்த மாறாட்டங்களை வேறு பலவற்றிலும் காணலாம்.

ஜனாதிபதியின் முதல் இந்திய விஜயத்தில் இணைந்து செல்லும் முன் பிரதமர் ஹரிணி அமரசூரிய, இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜே.ஆரினால் நாட்டின் நாடாளுமன்றத்துக்கு ஒளிவுமறைவாக செய்யப்பட்டதால், தங்களது அரசாங்கத்துக்கு இந்திய அரசுடன் இலங்கையின் நன்மைகள் கருதி அதனுடைய சரத்துக்கள் பற்றி பேச உரிமை உண்டு என்ற கருத்தை ஊடகங்களுக்குப் பகிர்ந்தார். எந்தக் கருத்துக்களை பற்றி பேச உத்தேசிக்கப்பட்டது, அது 13ஆம் திருத்தத்தையும் உள்ளடக்குமா என எதுவும் கூறப்படவில்லை .ஆயினும் இந்திய சந்திப்பின் பின்னர் இருதரப்பும் இணைந்து வெளியீட்ட அறிக்கையில், ஒப்பந்தம், 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் போன்றவை பற்றி மட்டுமல்ல, இனப்பிரச்சினை பற்றியே எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சமகாலத்தில் ஜே.விபியின் நீண்ட காலச் செயலாளர் றில்வின் சில்வா 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இருப்பதாகத் தான் கருதவில்லை என ஊடகங்களுக்கு செவ்வியளித்தார். தேசிய மக்கள் சக்தியின் பிரதான தலைவர்களால் இது கண்டிக்கப்பட்டாலும், அச்சமயம் சென்னையில் மாநிலத் தலைவர்களுடன் சந்திப்புகளில் ஈடுபட்டிருந்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தங்களுடைய அரசாங்கத்துக்கு 13ஆம் திருத்தத்தை தொடவோ, மாற்றவோ எண்ணங்கள் இல்லை, அதனை மாகாண, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைப் பலப்படுத்தும் வகையில் அமுல்படுத்துவோம், உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் மிக விரைவில் நடக்கும் என உறுதி அளித்தார்.

அமைச்சரோ 13 ஆம் திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் என குறிப்பிடாமல், 13 ஆம் திருத்தத்தின் வழியில் மாகாண, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைப் பலப்படுத்துவோம் என்று குறிப்பிட்டு, அதனை எல்லாத் தமிழ் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுமா என்ற கேள்வியையும் முன் வைத்தார். ஜனாதிபதியின் அதிகாரங்கள் மாகாண ஆளுநர் ஊடாகப் பரவலாக்கப்படுமா, அன்றில் மாகாண சபைகளுக்கே நேரடியாக வழங்கப்படுமா என்ற ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர் விடை தரவில்லை. உள்ளூராட்சித் தேர்தல்களின் பின், எல்லா சபைகளும் தங்களது அதிகாரத்தின் கீழ் அமைய வேண்டும், இயங்க வேண்டும் என



ஜனாதிபதி கருத்து தெரிவிப்பதில் இருந்து, அதிகாரங்கள் தம்வர்களாலேயேதான் பிரயோகிக்கப்படும் என்பது சொல்லாமல் சொல்லப்படுகின்றது.

அதே அமைச்சர் சந்திரசேகரன் நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையை எதிரொலித்து, அந்தத் தேர்தல் நேரங்களில் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வந்தமையோ அல்லது வருவதோ சமஷ்டி, 13 ஆம் திருத்தம், அன்றில் சுயாட்சி தருவதற்காக அல்ல, ஆனால் மக்களுடன் பேசி, அவர்களுக்கு இருக்கும்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

பல குறைபாடுகளை அறிந்து கொள்வதற்கே என்றார். இந்தக் குறைபாடுகள் தமிழ் மக்களது தேசிய அபிலாசைகள் பற்றியனவாக இருக்காது என்ற தொனியும் பொருளும் இதற்குள் அடங்கின.

இதனை அடுத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ்., புளொட் யாவும் தமிழ்க் கூட்டமைப்



பாக இணைந்திருந்த நாள்களிலே, நல்லாட்சிக் காலத்தில், தயாரிக்கப்பட்ட அரசமைப்பு நகலைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என ஆணித் தரமாக அறிவித்தார். அதன் பிரகாரம் 13 ஆம் திருத் தச் சட்டத்தையும், தமிழ் மக்களின் பிரச்சினைக் குத் தீர்வாக தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அவரது அறிவிப்பு குறித்தது.

தற்சமயம் அவர்கள் தமிழர் கூட்டமைப் பாக இல்லை. ஆயினும், அரசமைப்பு யாப்பை உருவாக்கும் நாடாளுமன்ற குழுவில் சுமந்திரன், சித்தார்த்தன், இன்றைய ஜனாதிபதி அநுராவும் இருந்தனர்.

அமைச்சர் சந்திரசேகரன் சுற்றி வளைத்துச் சொல்லியதற்கும், ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரத மராக தனது 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர் தல் உரைகளில் கூறியவற்றிற்கும் வித்தியாசம் இல்லை நோக்கம் ஒன்றுதான். ஜே.ஆரின் கூற்றுப் படி, சிறிலங்கா ஒரு நாடு, அங்கு குறிப்பிட்ட இன மக்களுக்கோ, ஒரு குழுமத்திற்கோ நாட்டின் எந் தப் பகுதிகளிலும் முன்னுரிமை இல்லை, ஒவ்-வாருவரும் சம உரிமை உள்ளவர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாட்டின் எந்த பகுதியிலும் வாழ்வதற்கு உரிமை உண்டு, அத்தோடு தமிழ் மக்களுக்கு எனத் தனியான பிரச்சினைகள் உண்டு, அவை தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் அவர் ஏற்றார்.

அதனைத்தான் ஜே.வி.பி. தலைவர் விஜயவீரா 1978 இல் இருந்து தனது கருத்துக்களிலும், 1986 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட தனது நூலிலும் கூறினார். ஆயினும் தமிழ் மக்கள் தென்பகுதி களில் இருந்து 1958, 1977, 1983 கலவரங்களால் வெளியேற்றப்பட்டனர்.

தமிழ் மக்கள் தமது இழந்த அரசு உரிமை களை மீளப் பெறுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற் றிய போதும், அதற்காக இளைஞர்கள் ஆயுதம் தாங்கி போராடிக் கொண்டிருந்த காலங்களி லும், ஜே.ஆர். அதே கருத்துக்களைத்தான் தெரி வித்துக்கொண்டிருந்தார்.

அரசியல், பின் திம்பு பேச்சு வார்த்தைகளுக்கு முன்னேறி, அதன்பின் இந்தியப் பிரதமர் இந்தி ராவின் பிரதிநிதியாக பார்த்தசாரதி நடத்திய பேச்சுக்கள் ஊடாக ஜே.ஆர். கூட்டிய சர்வ கட்சி மாநாட்டின் பெறுபேறுகளை அடுத்து, 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் முடிந்தது.

அமைச்சர் சந்திரசேகரன், ஜனாதிபதி அநுர கூறியவற்றுக்கு தமிழரசு கட்சி தலைவர் சி.வி. கே.சிவஞானம் பதிலளித்த தன்மையும், காணி உரிமைப் பிரச்சினையில் சுமந்திரன் எடுத்த நிலை யின் தன்மையும் தமிழ் மக்களது உணர்ச்சி அரசிய லின் பிம்பங்களாகவே தொடர்கின்றன.

எவ்வளவுதான் புத்திசாலிகளாக அவர்கள் பார்க்கப்பட்டாலும் அவர்கள் குறித்து தொண்டமான் கூறியவை கவனிக்கத் தக்கவை. 1977 -1984 காலங்களில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழ கத்தின் சார்பாக நான், கே.ஸி.நித்யானந்தா போன்ற வர்கள் தமிழ் மக்களின் பொதுவான நிலைகள், சன்சோனி ஆணைக்குழுவில் முன்வைக்கப்படும்



வாதங்கள் பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கி ரஸ் நிர்வாகிகளுடன் - முக்கியமாக தலைவர் தொண்டமானுடன் - கலந்துரையாடுவது வழக்கம். இந்திய வம்சாவளியினரை, முக்கியமாக தமிழ் தோட்டத் தொழிலாளர்களையும் வர்த்தகர்க ளையும் வெளியேற்ற வேண்டும் என்பதுதான் 1971 இல் உருவாகிய ஜே.வி.பி. தலைவர் விஜவீரவின் கருத்தாக இருந்தது.

1983இல் தலைவர் அமிர்தலிங்கம் நாட்டை விட்டு வெளியேற வசதிகள் மேற்கொள்ளுமாறு பிரதமர் இந்திரா காந்தி நேரடியாக தொண்ட மானிடம் பேசி, அவரது காரில்தான் அமிர்தலிங்கம் மாறுவேடத்திலும், அவரது மனைவி இன்னும் ஒரு காரிலும் கலகக்காரர்களைத் தவிர்த்து, விமானம் ஏறி வர முடிந்தது. தொண்டமானிடம் இருந்தது

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

சாதுரியமும், தொழிற்சங்க அனுபவமும், அதனை எப்படிக் கட்டியாள்வது என்ற கெட்டித்தனமும்தான்.

அப்பொழுது பார்த்தசாரதியின் தூதுகளுக்கு பின் ஜே.ஆர். ஏற்படுத்திய சர்வ கட்சிக் கூட்டம் நடந்து முடிந்திருந்த வேளை. அமிர்தலிங்கமும் கட்சி தலைவர்களும் அதில் பங்கு பற்றி இருந்தனர். சர்வ கட்சி கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தமிழர் கோரிக்கைகள் எல்லாவற்றையும் – ஒன்றைத் தவிர மற்றவை அனைத்தையும் – நிராகரித்தது. தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கையான இந்திய வம்சாவளியினர் யாவரும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது சர்வ கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் கோரிக்கையை தமிழர் விடுதலை கூட்டணியும் முன்வைத்து ஆதரித்திருந்தது.

இதனை சுட்டிக்காட்டிய தொண்டமான், '1971 இன் நிலைமையையும், இன்றையதையும், சிங்கள பேராண்மையில் மனோபாவங்களையும் பார்த்தீர்களா? கூட்டணியின் தலைவர்கள் எல்லோருமே படித்தவர்கள். புத்திசாலிகள். நிதானமானவர்கள். ஆனால் பேச்சுவார்த்தைத் திறன் குறைந்தவர்கள். பிடித்த பிடியிலேயே நிற்பதனால் சந்தர்ப்பங்களை விட்டு விடுகிறார்கள். தொழிற்சங்க அனுபவங்கள் கொண்ட நித்தியானந்தா போன்றோர்





பேச்சு வார்த்தைகளில் அவர்களோடு இணைந்து செயல்பட வேண்டும்' என வலியுறுத்தினார்.

ஆகஸ்ட் 1956இல் தமிழரசு கட்சி திருகோணமலையில் நடத்திய சம்மேளனத்தில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். தீர்மானம் 4 கோரிக்கைகளைக் கொண்டது.

முதலாவது – தமிழ் மொழி அடையாளம் கொண்ட ஒன்று அல்லது அதற்கு மேலான மாநில அரசுகள் உருவாக்கப்பட்டு, அவை பரந்த அதிகாரங்களைக் கொண்டவையாகவும் ஆனால் இலங்கையின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் அடங்கியவையாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது – தமிழ் மொழிக்கான உரிய அந்தஸ்து. சிங்களத்துக்கு இணையாக அரச கரும மொழியாக வேண்டும்.

மூன்றாவது – இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும்.

நான்காவது – பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

இவற்றின் அமுலாக்கத்திற்கு சொல்லப்பட்ட செய்திதான் முக்கியமானது.

இந்த நான்கு கோரிக்கைகளும் அமல்படுத்தப்படாவிட்டாலோ அன்றில் 20 ஆகஸ்ட் 1957 க்கு முன் பிரதம மந்திரியும் இலங்கையின் நாடாளுமன்றமும் சமஷ்டி அடிப்படை கொண்ட அரசை நிறுவத் தவறினாலோ தமிழரசுக் கட்சி வன்முறையற்ற நேரடி நடவடிக்கைகளில் இறங்கும் என்பதுதான்.

அதற்குப் பிரதி நடவடிக்கையாக பிரதமர் பண்டாரநாயக்கா மோட்டார் வாகனங்களில் சிங்கள 'சிறி'யை கட்டாயமாக்கினார். அச்சடிக்கப்பட்ட உலோக நாணயங்கள் தனிச் சிங்களத்திலேயே இருந்தன. காகித நோட்டுகளில் ரூபா அல்லது சதம் என்பது மாத்திரமே தமிழில் இருந்தது. வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான நியமனம் சிங்களத்தில் மாத்திரமே இருந்தது. பிரதமரின் சிம்மாசன உரை முதலில் சிங்களத்திலும் இரண்டாவது ஆங்கிலத்திலும். தமிழில் இருக்கவே இல்லை. தமிழரசுக் கட்சியினர் சிம்மாசன உரையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். குடியேற்றம் தொடர்ந்தது.

தமிழரசின் பரவணித் தொடர்போ என்னவோ, இப்போது காணி அதிகார வர்த்தமானி மே 28 முன் வாபஸ் பெறப்படாவிட்டால் நேரடிப் போராட்டங்களில் இறங்குவோம் என சுமந்திரன் அறிவித்துள்ளார். அதற்கான எதிர் சமரசம் ஏற்படாவிட்டால், எதிர் வினைகள் கட்டவிழலாம். அன்றில் பேசப்பட்ட நல்லிணக்கம் நடைமுறைகளில் காட்டப்படுமா என்பதை எதிர்பார்க்க வேண்டும்.

(தொடரும்)



# புதுக்குடியிருப்பில் நேற்று தேனீக்கள் தினம்

(பா.சதீசன்)

வடமாகாண விவசாயத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினால் காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் அனுசரணை யுடன் உலக தேனீ தின நிகழ்வு நேற்றையதினம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள வள்ளிபுனம் பிர தேச பொதுநோக்கு மண்டபத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந் நிகழ்வின் போது தேனீ வளர்ப்பு சம்பந்தமான கருத்தரங்கும், தேனீ வளர்ப்புக்கான தேனீப் பெட்டிகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து தேனீ வளர்ப்பு பிரதேசத்திற்கான கள விஜயமும் இடம்பெற்று தேனீ வளர்ப்பு தொடர்பான விடயங்கள் செய்முறைகள் மூலம் தெளிவூட்டப்பட்டன.

புதுக்குடியிருப்பு மந்துவில் பிரிவின் விவசாய போதனாசிரியர் பு.பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ் வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கிருபவதனி சிவ தீபன், உதவி விவசாய பணிப்பாளர் மேரிஆன்சலா லக்சன், புதுக்குடி யிருப்புப் பிரதேச செயலாளர் இ.விஜய குமார், பிரதேச செயலக உதவி திட்ட மிடல் பணிப்பாளர் து.ஜெயந்தன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப் பாசன விவசாய திட்டத்தின் விவசாய நிபுணர் க.வசந்தன், கிராம சேவையா ளர்கள், விவசாய போதனாசிரியர்கள், கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





















# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றி!

## கிழக்கு மாகாணத்தின் வைத்தியத்துறையில் புதிய சாதனை

**(வாலகிருஷ்ணா)**

கிழக்கு மாகாணத்தின் வைத்திய துறையின் வரலாற்றில் முதன் முறையாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை முன்னெடுத்து சாதனை படைத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம் மற்றும் மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுத் தலைவர் டாக்டர் மதனழகன், சிறுநீரக சிகிச்சைப்பிரிவின் தலைவர் டாக்டர் முஜாஹீத் உட்பட இந்த சிகிச்சையில் பங்குகொண்ட வைத்திய நிபுணர்கள் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி கலாரஞ்சினி கூறயவை வருமாறு:-

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பல்வேறுபட்ட சத்திரசிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. சிறிய, பெரியளவிலான சத்திரசிகிச்சைகள் நடைபெற்றுவருகின்றன. ஒரு வருடத்திற்கு 10ஆயிரத்திற்கும் அதிகமான பெரியளவிலான சத்திர சிகிச்சைகளும், 12 ஆயிரத்து 500க்கும் அதிகமான சிறிய சத்திசிகிச்சைகளும் நடைபெற்றுவருகின்றன.

அந்த வகையில் இந்த மாதம் 15ஆம் திகதி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியைப்பெற்று உரிய முறையில் இந்த மாற்று சிகிச்சை நடைபெற்று, இன்று (நேற்று) மாற்று சிகிச்சை பெற்றவர் வீடு செல்கின்றார்.

இந்த சிறுநீரக மாற்று சிகிச்சையை ஒரு குழுவாகச் செய்து முடித்துள்ளனர். வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் கொழும்பு, அநுராதபுரம் வைத்தியசாலையில் உள்ள விசேட வைத்திய நிபுணர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் இந்த மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக செய்துமுடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி ▼






# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றி!

**தொடர்ச்சி▲**

கிழக்கு மாகாணத்தில் முதன்முதலாக இந்த சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஒரு மைல்கல்லாக இந்த அறுவை சிகிச்சை காணப்படுகின்றது. இதுபோன்ற சிகிச்சைகளை தொடர்ந்து செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்.

இந்த சிகிச்சைகளுக்குரிய சில சாதனங்கள் வேறு வைத்தியசாலைகளிலிருந்து எடுத்துதான் இந்த மாற்று சிகிச்சையினை செய்தோம். இந்த சாதனங்களை எங்களது வைத்தியசாலைகளுக்குப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுப்போம். - என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுத் தலைவர் டாக்டர் மதனழகன் -

சிறுநீரகம் வழங்குபவரையும் மாற்றுபவரையும் பொருத்தமானவர்களா என்பதை சிறுநீரகவியல் நிபுணர் வைத்தியகுழாம் பரிசோதனை செய்து அவர்கள் பொருத்தமானவர்கள் என்ற உறுதிப்படுத்தலுடன் சுகாதார அமைச்சின் அனுமதி பெறப்பட்டு, அதன் பின்னர்தான் இந்த மாற்று சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை நாங்கள் ஒரு குழுவாக செய்திருந்தோம்.

முதன்முறையாக இந்த பகுதியில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை இது. இந்த மாற்று சிகிச்சையானது ஒரே தடவையில் கொடையாளியிடமிருந்து சிறுநீரகம் எடுக்கப்பட்டு பெறுனருக்கு வைக்கப்பட்டதனால் இரண்டு சத்திரசிகிச்சை கூடங்களில் இரண்டு அணியாக வைத்திய நிபுணர்கள் செயற்படவேண்டிய நிலையிருக்கின்றது.

முதன்முதலாக நாங்கள் ஆரம்பித்து வைத்திருக்கின்ற செயற்பாடு. இது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இதற்கு சுகாதார அமைச்சு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு உறுதியளித்திருக்கின்றது.

இந்தவேளையில் பொதுமக்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த உறுப்பு மாற்று ஓர் உயிருள்ள கொடையாளியிடமிருந்து இன்னுமொரு பெருநருக்கு சென்றது. இது மிகவும் தட்டுப்பாடாக விருப்பதன் காரணமாக தகுதியுள்ள நபர்கள், விபத்து காரணமாக மூளைச் சாவு அடைகின்றவர்கள் அவர்களின் உறுப்புகளை தானம் செய்து அதனை எடுத்து பொருத்துகின்ற செயற்பாடு உலகமெங்கும் நடைபெற்றுவருகின்றது. இலங்கையிலும் மிகவும் சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் மிகவும் கவலைக்குரிய விடயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவ்வாறான சம்பவங்கள் பல இருந்தும் கூட எமது மக்கள் அதற்கு முன்வருவதில்லை. எனவே இனிவரும் காலத்திலாவது அதற்கு முன்வந்து மரணிக்கின்றவர்கள், மூளைச்சாவு அடைந்திருக்கின்றவர்கள் அதனை வைத்தியர்கள் உறுதிப்படுத்திய பின்னர் உறுப்புகளை தானம் செய்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அவ்வாறு உறுப்புகளை தானம் செய்கின்றபோது அந்த இறக்கின்றவரின் பெயரினால் இரண்டு பேர் உயிருடன் வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். மக்களிடம் மிகவும் விநயமாக வேண்டிக்கொள்வது உறுப்பு தானங்களை மேற்கொள்வதற்கு நீங்கள் முன்வரவேண்டும். அதற்கான கட்டமைப்பு இந்த போதனா வைத்தியசாலையில் இருக்கின்றது. - என்றார்.



# மன்னார்த் தீவை அழிவுக்குள் தள்ளும் நாச வேலைக்குத் துணை போகாதீர்!

## பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் மன்றாட்டம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)




மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. மன்னார் தீவு வேகமாக அழிவு நிலைக்கு தள்ளப்பட்டு கொண்டு வருகிறது. அதற்காக அதிகாரிகளுடன், அரச சார்பற்ற நிறுவனங்களும், பல தொழில் நிறுவனங்களும் முன் நின்று செயல்பட்டு வருகின்றன. இதற்கு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ்அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் எவ்வித அனுமதியும் இன்றி கனிய மணல் அகழ்வு நடவடிக்கை மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக மக்களினுடைய காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுவதையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் செயல்படுகின்றமையையும் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் மக்களினுடைய வாழ்வாதாரமும், எதிர்காலமும் பாதிக்கப்படும் என சூழலியலாளர்கள் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் மக்களின் எதிர்காலப் பிரச்சுனைகளை உள்வாங்காமல், அரச திணைக்களங்களின் ஆதரவுடன் பல நிறுவனங்கள் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன.

மக்களை அழிவிலிருந்து காப்பாற்றாது, இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படும் பல் தேசிய நிறுவனங்கள் மக்களின் வாழ்விடங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு வருகின்ற எந்த நிறுவனங்களுக்கும் மக்கள் எவ்வித உதவிகளையும் வழங்க வேண்டாம். இரண்டு கனிய மணல் அகழ்வு நிறுவனங்களும், மூன்று காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களும், மன்னார் மக்களுக்கு எதிராக மிக வேகமாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிறுவனங்கள் பலரை பணம் கொடுத்து வாங்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளன. ஏழ்மை நிலையில் உள்ள மக்களையும் ஏமாற்றி மக்களின் வாழ்வாதாரத்திற்கு தாம் கை கொடுக்கின்றனர் எனக் கூறி, மக்களை இத்திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கச் செய்யும் வகையில் அவர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

மேலும் மக்களின் காணிகளை அதிக பணம் கொடுத்து வாங்கி, காணியைத் தமக்கு சொந்தமாக்கிக் கொண்டு, வாழ்விடங்களைஒ பறிக்கும் ஒரு நிலையையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராக போராட முன் வர வேண்டும். மக்கள் குறித்த திட்டங்களுக்கு ஒரு போதும் அனுமதியை வழங்கக் கூடாது என கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்றார்.

# மின்சார திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு




மின்சார திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய மின்சார சபையை 12 பிரிவுகளாக பிரித்து மறுசீரமைப்பதற்காக ஏற்கனவே காணப்பட்ட சரத்துக்கள் நீக்கப்பட்டுள்ளன.

புதிய திருத்தச் சட்டத்தில் மின்சார சபையை 04 பிரிவுகளாக பிரித்து மின்சார சபையை முழுமையாக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான சரத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என மின்சக்தி அமைச்சு தெரிவித்தது.

மேற்படி சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.



# மன்னாரில் அநுர அரசின் இரட்டை வேடம் அம்பலம்

## கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க அளவீடு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட கனிய மணல் அகழ்வுக்கு எதிராக பொதுமக்கள் பல்வேறுபட்ட போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில், உள்ளூர் முகவர்கள் சிலரின் உதவியுடன் இந்த மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு மக்களின் விருப்பம் இன்றி அனுமதி வழங்க மாட்டோம் என பகிரங்கமாக அறிவித்திருந்த நிலையில், தேர்தல் முடிந்து உள்ளூராட்சி மன்றங்கள் கூட அமைக்கப்படாத நிலையில் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்குவதற்கான அளவீட்டுப் பணிகளை அரச நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக கடந்த திங்கட்கிழமை மத்திய நில அளவை திணைக்களத்தினர் பேசாலை ஐம்பது வீட்டுத் திட்டப் பகுதியில் கனிய மணல் அகழ்வை மேற்கொள்வதற்கான அளவீட்டு பணிகளை முன்னெடுப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் வருகை தந்திருந்த நிலையில் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர்களின் தலையீடு காரணமாக அளவிடும் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

இப்படி நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு மேற்கொள்ளும் பணிகளை ஆவணப்படுத்த முயன்ற ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் விதமாக ஊடகவியலாளர்களின் ஆவணப்படுத்தல் செயற்பாட்டை காணொளியாகவும் பதிவு செய்தனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவும் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப் போவதில்லை என அநுரகுமார திஸநாயக்க தெரிவித்த நிலையில், அவரின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின், சில நாள்களில் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அரச திணைக்களங்கள் வருகை தந்தபோது பொது மக்கள் எதிர்ப்பால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து சில நாள்களே நிறைவடைந்த நிலையில் மீண்டும் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள திணைக்களங்கள் வருகை தந்துள்ளன.

இவ்வாறு அனுர தலைமையிலான அரசாங்கம் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் காலங்களில் ஒரு வாக்குறுதியையும், தேர்தல் நிறைவடைந்த பின்னர் வாக்குறுதிக்கு எதிரான நிலைப்பாட்டையும் முன்னெடுத்து வருகின்றமை மன்னார் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரம் மன்னாரில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட சில உள்ளூர் முகவர்களைப் பயன்படுத்தி உள்ளூர் திணைக்களங்களிடமும் அதே நேரம் சில கிராம மக்களிடம் அனுமதி பெறுவதற்கும் கனிய மணல் அகழ்வோடு தொடர்புடைய நிறுவனம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.







# சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட ஆறு பேர் ஐந்து படகுகளுடன் முல்லைத்தீவில் கைது

**(பா.சதீசன்)**

கொக்குதொடுவாய்க் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோத முறையில் சுருக்குவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆறு பேர் ஐந்து மீன்பிடி படகுகள் மற்றும் இரண்டு சுருக்குவலைகளுடன் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடித் தொழில் இடம்பெறுவதாக கடற்தொழில் திணைக்களத்தினருக்குகிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அந்த இடத்திற்குச் சென்ற கடற்தொழில் திணைக்களத்தினர், கடற்படையினர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டிருந்த ஆறு பேரை ஐந்து மீன்பிடி படகுகளுடனும் இரண்டு தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளுடம் கைது செய்தனர்.

சட்டவிரோத மீன்பிடிக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சிய படகுகள் பற்றிய விசாரணைகளை கடற்தொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு கைது செய்யப்பட்ட ஆறு நபர்களும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவிருந்தனர்.

புத்தள மாவட்டத்தை சேர்ந்த ஐந்து நபர்களும் கொக்குதொடுவாய் பகுதியை சேர்ந்த ஒருவருமாக ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.












# இன்றைய ராசி பலன்கள் - 22.05.2025




இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். சவாலான சூழ்நிலைகள் காரணமாக இன்று சமநிலை இழக்க நேரலாம். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையுடன் கவனமாக பணியாற்ற சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.

பணியில் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தைகய சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது. சகஜமான அனுகுமுறையால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. விரும்பியது கிடைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. வளைந்து கொடுத்து போவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையாக திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்களின் குழப்பமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படவில்லை. பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். இலக்குகளை அடைவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் நிறைந்து காணப்படும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் உங்கள் தனித் திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல் திறனில் இது பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.

ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அணுகுமுறையில் வேகம் கூடாது. உங்கள் செயல்களை திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அதனால் நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

உங்களின் எதிர்மறை உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்த்தல் நலம்.

பணப்புழக்கம் சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகளுக்கு நேரம் செலவழிக்க நேரும். மனதில் குழப்பங்கள் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். நன்மையான பலன்கள் கிடைக்க திட்டமிடுதல் நல்லது.

உங்கள் துணையுடன் கவனமாக உரையாட வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் உறவுப் பிணைப்பு வலுப்படும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண் எரிச்சல் ஏற்படலாம். கண்களை வருத்திக் கொள்ளாமல் இருப்பது நல்லது.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்க ஆழ்ந்து யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருக்காது.

உங்கள் துணையுடன் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாளை அமைதியாக கழிக்க இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் பிரியமானவருடன் உங்கள் அணுகுமுறையை மாற்றிப் பழகுங்கள்.

தேவையற்ற செலவினங்கள் இன்று காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான உறுதியுடன் காணப்படுவீர்கள். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நெருக்கம் காணப்படும். உங்களின் பரஸ்பர பேச்சில் அது வெளிப்படும். இருவரும் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டம் ஒன்றைத் தீட்டலாம்.

மனதில் இருக்கும் திருப்தி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுபவித்து மகிழும் நாள். உங்கள்குழந்தைகளைப்பற்றிபெருமைப் படுவீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியாற்றுவதை எளிதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.உங்கள் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு முயற்சிக்கு இன்றைய நாளை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.05.2025




எதிர்பாராத நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். சவால்களை சந்திக்க பொறுமை தேவை.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறமையுடன் செயலாற்ற மிகுந்த கவனம் தேவை.

உங்கள் துணையுடன் பேசும் போது களிப்பான மனநிலையில் எற்றுக் கொள்ள வேண்டும். அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக கேட்பதன் மூலம் உறவில் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். எதிர்கால பாதுகாப்பு கருதி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க சத்தான உணவை உட்கொள்ளவேண்டும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது.




இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். உங்கள் முயற்சியில் வெற்றிகளை எளிதாக அடையலாம். இதனால் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

சக பணியாளர்கள் ஆதரவாகாவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் விதமாக உங்கள் செயல்திறன் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் பராமரிக்க முடியும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உபரி பணத்தை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தலாம்.

# ஏறாவூரில் பல லட்சம் ரூபா பெறுமதியான 22 கஜமுத்துகளுடன் இரண்டு பேர் கைது

## அவர்களில் ஒருவர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூரில் பல லட்சம் ரூபா பெறுமதியான - தடை செய்யப்பட்ட - 22 கஜமுத்துக்களுடன் 57 வயதுடைய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட இரு வியாபாரிகளை நேற்றுப் புதன்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தினவின் ஆலோசசனைக்கமைய, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி.மேனன் தலைமையிலாக குழுவினர் நேற்றுக் காலை 11.00 மணியளவில் ஏறாவூர் பிரதேசத்தில் வீதி ஒன்றில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது இந்த நபர் தடை செய்யப்பட்ட யானை தந்தத்தின் பாகமான 4 கஜமுத்துக்களை எடுத்து வந்து வியாபாரத்தில் ஈடுபட்டபோது அங்கு மாறு வேடத்தில் இருந்த பொலிஸார் சுற்றிவளைத்து அவரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கஜமுத்துக்களை விற்பனை செய்த அம்பாறை சாய்ந்தமருதைச் சேர்ந்த 57 வயதுடைய கட்ட ஒப்பந்தகார் ஒருவரை 18 கஜமுத்துக்களுடன் ஏறாவூரில் வைத்து நேற்று மாலை 5.00 மணிக்குப் பொலிஸார் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் ஏறாவூரைச் சேர்ந்தவர் எனவும், இவர் கடந்த 2005 ஆம் ஆண்டில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டவர் எனவும், இவர்கள் இருவரையும் தொடர்ந்து விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணை பிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.